பதிவு எண்—M. 5720

உ

வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர்: இளவழகனார்.

5—கிளை குருகுலம், மாம்பாக்கம்; விசய, ஆனி; 19—6—53 தளிர்-38

குருகுலத்தின் குறிக்கோள்:

பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது

## விருந்தும் விளைவும்

நிலங்களில் விளைவு செய்வது விருந்தோம்புவதற்கு என்பர்; இல்லத்தில் விருந்தோம்புவதும் நிலத்தில் விளைவு பெருகுவதற்குக் காரணமாகின்றது.

வாழ்க்கையில் எந்தச் செயல் நிகழ்வதற்கும் முன்னைப் புண்ணியம் வேண்டும். அதிலும், உழவு தொழிலால் உண்டாகும் விளைவுக்கு அது மிகவுங் கட்டாயமானது.

விளைவு நிலை அற்புதமான நிகழ்ச்சி என்றே கூற வேண்டும். தொழில்கள் எல்லாவற்றுள்ளும் உழவு தொழிலே இயற்கையோடு ஒத்த தொழில். மற்றவை யெல்லாம் செயற்கைத் தொழில்கள்; முதன்மையுள்ள உழவு தொழிலுக்குத் துணைத் தொழில்கள்!

ஒரு விதை இட்டுப் பல விதைகள் பெறத்தக்க ஆக்கமான தொழில் உழவு. இயற்கை அன்னையின் மடியில் தவழ்ந்து அத் தாயின் தாலாட்டில் வளர்ந்து செழிக்கும் தொழில்! பிறர்க்குத் தீங்கு இல்லாத, ஆனால் உதவியும் புரியத் தகுந்த, அதுவும் அடிப்படைத் தேவையான உணவு உடை முதலியன உண்டாக்கத் தகுந்த அருமையான பெரிய நற்றொழில்!

இத்தகைய தொழிலின் ஆக்கம், அருளே உருவமான இயற்கை அன்னையே ஒன்றுக்குப் பல மடங்காகப் பெருக்கித் தரத் தகுந்த வாய்ப்புப் பெற்றிருப்பது நல்லது; ஆக்கத்திற்கு வேறு வழியில்லை. புண்ணியப் பயன் அவ்வாறு செய்யும்.

உலகத்தில் பல வகையாலும் அப்புண்ணியத்தைப் பெறலாம்; ஆயினும் பசியாற்றுவித்துப் பெறுகின்ற புண்ணியத்தைப் போல் வேறு வகையில் பெறுதல் இயலாது. புண்ணியச் சிறப்பால் அவர் இல்லத்தில் செய்பாள் உறைவதோடு நிலத்திலும் விளைவு பெருகுவதாய் இருக்கின்றது.

விருந்து ஓம்புகின்றபோது வந்த விருந்தினர் உண்டபின் மிச்சத்தை உண்ணும் வழக்கு, மிகச் சிறந்த புண்ணியத்தை அமைத்துத் தரும். அந்த எச்சில், போற்றல் வாய்ந்தது; பஞ்ச பூதச் சத்துக்களோடு அருள் சத்தும் அமைந்தது!

வித்தும் இடல் வேண்டுங்
கொல்லோ,
விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம்?

விருந்து ஓம்பி மிச்சில் மிசைவான் புலம்—விருந்தினரை முதலில் உண்பித்து மிகுந்ததைப் பின்பு உண்ணும் ஒழுக்கமுடையவனது நிலத்திற்கு, வித்தும் இடல் வேண்டுங் கொல்லோ—விளைவுக்காக விதையும் இட வேண்டுமோ?

தானே விளையும் என்றபடி; அவ்வாறு சொல்வதன் கருத்து நல்ல விளைவு இயல்பாகவே பெருகி வரும் என்பது கருத்தாம்.

உம்மை உயர்வின்கண் வந்தது வேண்டுங்கொல்லோவேண்டுமோ என்பது; விதை இடவேண்டாம் என்னும் எதிர்மறைக் கருத்து உண்டாதலின் இதிலுள்ள ஓகாரம் எதிர் மறை. கொல், ஐயப் பொருள் தந்தது. மிச்சில் மிச்சம்.

விருந்தினர் அகட்டில் இட்ட உணவே நிலத்திற்கும் வித்தாகி, மிக்க விளைவுதரும் என்பது கருத்து. புலத்தில் விதைகள் இட்டாலும் அதன் விளைவு விருந்தோம்பலின் பயனே என்றார்; புண்ணிய பயிரில் புண்ணியம் தெரியும் என்பது இந்நாட்டுப் பெருமொழி!

# "முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)
**5-ம் ஆண்டுக் கையொப்பம்**
*(3-10-52 முதல்)*

| | | | | |
|---|---|---|---|---|
| உள் நாடு | ரூ. | 4 | 0 | 0 |
| வெளி நாடு | ரூ. | 6 | 0 | 0 |
| தனித் தாள் | | 0 | 1 | 0 |
| ஆயுள் — | | | | |
| கையொப்பம் | ரூ. | 100 | 0 | 0 |

விற்பனையாளர்கள், தேவைக்கு முன்பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)


"யாதும் ஊரே, யாவரும் கேளிர்;
தீதும் நன்றும் பிறர்தர வாரா."
—புறநானூறு.


| மலர் | | தளிர் |
|---|---|---|
| 5 | விசய, ஆனி, 19-6-53 வெள்ளி | 38 |


## சைதைக் கழக விழா

சென்னைச் சைதாப்பேட்டையில் நம் ஆசிரியர் அவர்களால் தொடங்கி வைக்கப் பெற்று நடந்து வரும் திருவள்ளுவர் செந்தமிழ்ச் சிவ நெறிக் கழகத்தின் ஏழாம் ஆண்டு விழா அண்மையில் சிறப்புற நடை பெற்றது.

மே 24 உ முதல் 30 உ வரையில் நடை பெற்ற அவ் விழாவை மேற்படி கழகத்தார் தம் மூர்த்திருக்காரணீச்சுரர் தேவார பாராயண சபையார் முன்னெல்லாம் திருஞானசம்பந்தர் நாளில் நடத்தி வந்த திருமுறை விழாவை மீண்டும் தொடங்கி நடத்துகின்ற முறையில் அதனோடு இணைத்து நடத்தினர்.

விழாவை 24-5-53 அன்று மாலை திருப்புகழ்மணி அவர்கள் தொடங்கி வைத்தார்கள். அன்று முதல் நாடோறும் மாலையில் தக்கவர்களின் சொற் பொழிவுகள் ஒலிப் பெருக்கி முதலிய அமைப்புகளுடன் சிறப்பாக நடை பெற்றன.

28-5-53 மாலை திருவள்ளுவர் திருநாளில் அவர் பட ஊர்வலம் வீதிச் சொற்பொழிவுகளுடன் திருவள்ளுவர் விழாவாகச் சிறப்பாக நடைபெற்றது.

29-5-53 மாலை கழக ஏழாம் ஆண்டு நிறைவு விழா செந்தமிழ் விழாவாகத் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை B. A., L. T. அவர்கள் தலைமையில் காஞ்சிபுரம் மெய்கண்டார் கழக ஆசிரியர்களான புலவர் திரு. வீ. திருஞானசம்பந்த முதலியார் புலவர் சி. அருணைவடிவேல் முதலியார் முதலியவர்கள் சொற்பொழிவுகளுடன் நிகழ்ந்தது.

மறுநாள் இரவு திருஞான சம்பந்தர் திருநாளில் சிவ நெறி விழாவாக ஆசிரியர் அவர்கள் தொடங்கிவைக்கத் திருஞானசம்பந்தரையும், திருமுறைகளையும் அலங்கரிக்கப் பெற்ற விமானத்தில் எழுந்தருளச் செய்து சென்னைச் சிவனடியார் திருக் கூட்டத்தாரும், இராயபுரம் இறைபணிக் கழகத்தாரும், ஆலந்தூர்ச் சிவனடியார் திருக்கூட்டத்தாரும், அருணகிரி நாதர் பக்தஜன சபையாரும், உள்ளூர்ச் சபையாரும் இன்னிசைக் கருவிகளோடு இசைமிழற்றிப் பின் தொடரத் திருமுறை விழா பாண்டு முதலிய வாத்தியங்களுடன் சிறப்புற நடைபெற்றது. காலையில் திருஞானசம்பந்தருக்குச் சிறப்பு முறையில் திருமுழுக்கும் திருவாராதனையும், ஏகாந்தசேவையும், திரு நெறித் தமிழிசைச் செல்வர், த. நடராசன், திரு. இ. பாலசுந்தரம் தேவார பாராயணத்துடன் நிகழ்ந்தது.

பெயருக் கேற்ற மேற்படி கழகத்தின் ஆண்டு விழா உரிய தலைவர்களின் நாளில் திருவள்ளுவர் விழாவாகவும், செந்தமிழ் விழாவாகவும், சிவ நெறி விழாவாகவும் நடைபெற்றது நினைந்து மகிழத்தக்க சிறப்புடையதாக இருக்கிறது.

ஆண்டுதோறும் திருவள்ளுவர் திருநாளும் திருஞான சம்பந்தர் திருநாளும் இடையில் ஒரு நாள் இருக்க முறையே வைகாசி அநுடத்திலும், மூலத்திலுமே வருமாதலின் இக் கழகத்தார் தம் கழக ஆண்டு விழாவை இம் முறையிலேயே திருக் கோயிலைச் சார்ந்த முறையில் ஊர்ப் பெருமக்கள் மகிழச் செய்வது பொருத்தமும் சிறப்பும் உடையதாகும்.

தொல்காப்பியர் பேரில் கழகத்தில் அமைந்திருந்த நூலகத்தை இவ்வாண்டு விழாவில் மீண்டும் பலர்க்கும் பயன்படும்படி திறந்து வைக்கவும் மற்றும் கழக வளர்ச்சியிற் கருத்து வைத்து அதற்கு இடம் முதலியன அமைத்துதவவும் இசைவு தெரிவித்த மேற்படி கழகத் தலைவர்களும், விழாவுக்கு உதவி செய்து கழக இளைஞர்களை ஊக்க மூட்டிய பெருமக்களும் பெரிதும் பாராட்டுக்குரியவராகின்றனர்.

வளர்க கழகம்!
வெல்க அதன் தொண்டுகள்!
விளங்குக சைதைப் பதி!

—ந.ரா. ஆடலரசு.

# அருள் துறை

## * நெஞ்சு விடு தூது *

(முத்துசாமி)

**ஊர்:**

"எண்ணெண்—ஊர் நடையான்"

அறுபத்து நான்கு கலைகளையும் அறிந்து, பின்னர், தன்னை மறந்து காமம் உண்டு பண்ணுதற்கு ஏதுவானவற்றை நீத்து மன அலைவு நீங்கும்படியாகத் தேவையில்லாத சிந்தையில் பிறக்கும் மோனத்தால் போக்கு வரவற்று இருக்கும் ஊர் உடையான்.

ஒரு கருத்தை அறுபத்து நான்கு கலைகளால் தெரிவிக்கத் தெரிந்திருந்தனர் நம் முன்னோர். அவைகளை யுணர்த்தும் நூல்களெல்லாம் இப்பொழுது இல்லை. மாதவி எண்ணெண் கலையும் தேர்ந்திருந்தாள் எனச் சிலப்பதிகாரம் கூறுகிறது. அங்ஙனமாயின் அவள் காலத்தில் அதனையுணர்த்தும் நூல்கள் இருந்திருக்க வேண்டுமன்றோ? சிலப்பதிகாரக் காலம் சங்ககாலத்தின் இறுதிக் காலம். அதனை இன்றைக்கு 1800 ஆண்டுகட்கு முன் எனலாம். நம் போற்றுதற குறைவால் அந் நூல்களை இழந்துவிட்டோம்.

கலையுணர்வில் சென்றால் காமம் உண்டாகாது. கலை, அறிவளவாக நுகர்வது. காமம் அறிவிழந்து பொருளளவாக நுகர்ந்து தானும் கெட்டுப் பொருளையும் கெடுப்பது. கலையால் கருத்துணர்த்தும்போது நல்ல கலை வல்லவர்களாய் அக் கலை நுட்பத்தை நுகரவேண்டுமேயன்றி, கலை சார்ந்திருக்கும் பொருளின் மீது நாட்டம் செலுத்தி அதனைக் கெடுத்து நுகர்தல் கூடாது. இக் காலத்தில் அழகுடைப் பொருள்களைக் கலையாகப் பார்த்து நுகர்வார் ஒரு சிலரே. தாமரை ரோசா முதலிய மலர்களைக் கசக்கி நுகர்வோரே மிகுதியாயிருக்கின்றனர். அவற்றைச் செடியிலேயே வைத்து அழகைக் காண்பதே கலை நுகர்ச்சியாகும்.

கலை நிலைக்குப் போனால் காம நிலை அழியும். ஆகவே "எண்ணெண் கலையால் கருத்தழிந்து காம நிலையானதெல்லாம் நீத்து" என்றார். கருத்தழிந்து—கலை நுகர்ச்சியில் தன்னை மறந்து.

சிவஞானம் பெற்றவர்களை அதாவது அருள் கைவரப் பெற்றவர்கள் பொருள்களைத் தேவையாய் நாடமாட்டார்கள். அவர்களுக்குத் தேவையென்பதில்லை. எங்கே தேவையில்லையோ அங்கே மனமும் அலைய வேண்டியதில்லை. மன அலைவடங்கிய நிலையை மோன நிலை யெனலாம். இந் நிலை கைவரப் பெற்றவர்கள் உடம்போடு கூடியிருந்தால் சீவன் முத்தர்கள்; அன்றேல் விடுதலை பெற்ற முக்சர்கள். இந் நிலைக்கு உயர்ந்தவர்கள் திரும்பிப் பெயர்ந்து கீழ் நிலைக்குச் செல்வதில்லை. அதனால் "ஓட்டற்று வீற்றிருக்கும்" என்றார். ஓட்டற்று—நீங்காது.

இவ்வாறு ஞானிகள் வீற்றிருக்கும் இடமே இறைவனுக்கு ஊர் எனப்பட்டது. ஆகவே வீடுபேறு இறைவனுக்கு ஊர் என்பதாயிற்று.

**தார்:**

"நாட்டத்தால்—மெய்யினன்"

கண்ணீர் தாரை தாரையாய் அருவிபோல ஒழுக சிந்தை மயக்கந் தெளிந்து உட் பண்பு ஓங்க உடம்பெல்லாம் மயிர் புளகம் கொள்ள பொய்யிற் கூடாத சத்தர்களாயிருக்க அத் தன்மையால் உள்ளம் நடுக்கம் கொண்டு உருகி அளவில்லாத பக்தி செலுத்திக்கொண்டிருப்பவருடைய மனத்தைக் கவர இருக்கும் அருளுக்கும் மேலாய் விளங்கும், அவர்களுடைய புகழ் மொழியே மாலையாக உடைய சத்திய உடம்புடையவன் (இறைவன்.)

தார் என்பது மார்பில் அணியும் மலர் மாலையைக் குறிக்கும். அலங்கல்—அசைந்துகொண்டிருப்பது என்னுங் காரணத்தால் மாலைக்குப் பெயராயிற்று. மார்பு விசாலமாக உடையோர் மாலையணிந்தால் அந்த மாலை மார்பில் புரண்டுகொண்டிருக்கும். "உருள் பூந் தண் தார் புரளும் மார்பினன்" என்று திருமுருகாற்றுப் படையில் வந்ததும் காண்க.

இங்கே இறைவனுக்கு மாலையாகச் சொல்லப்பட்டது மலர் மாலையயன்று. பக்தர்கள்

அன்போடு கண்ணீர் ததும்ப மெய்சிலிர்ப்ப உள்ள நடுக்கங் கொண்டு சொல்லும் புகழ் மாலையையே இறைவனுக்கு மாலையாகக் குறிப்பிட்டார். புகழ்ச் சொற்கள் மாலையென்பதை அருணகிரியார் "செஞ்சொற் புனைமாலை" என்று அநுபூதியில் கூறியிருத்தலாலும் அறியலாம்.

பக்தர்கள் கண்ணீர் சிந்துதல் முதலிய புற அடையாளங்களும் காட்டுதல் திருவாசகத்தில் "மெய்தானரும்பி" என்றற்றொடக்கத்துப் பாடலினாலும் அறியலாம். உண்மையான பக்தர்களுக்கு இப்புற அடையாளங்கள் நிகழ்வதை நிறுத்திக் கொள்ள முடியாது. அவை தானே நிகழ்வன. அதனாலேயே திருவள்ளுவரும் "அன்பிற்குமுண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர் புன்கண்ணீர் பூசல் தரும்" என்றார். இப்புற அடையாளங்களை வேண்டுமென்று வருவித்துக்கொண்டு மெய்யான பக்தர்கள் போல நடித்து ஏமாற்றுவாரும் உண்டென்பது கருதி "மெய்யர்" என்றார். ஆகவே மெய்ப் பக்தர்கள் புகழ்ச் சொல் இறைவனுக்குத் தார் என்க.

---

## விநாயகர்

சிவனடியார் திருக்கூட்ட அமைச்சர், ஆ. R. சம்பந்தம் அவர்கள், என்னை இக்கூட்டத்தில் பேச வேண்டும் எனத் தெரிவித்தார்கள். என்ன பேச வேண்டும் எனக் கேட்டேன், ஏதாவது தோன்றியதைச் சொல்லுங்கள் என்றார். ஆகவே எனக்குத் தெரிந்ததைச் சொல்லப் போகிறேன். இப்போது எங்குப் பார்த்தாலும் விநாயகர் பேச்சு நடக்கிறது. இந்தச் சமயத்தில் விநாயகரைப் பற்றியே பேச அமைந்திருப்பது மகிழ்ச்சி.

சமயம் என்பது பாவனைப் பயிற்சி; ஒன்றைப் பாவிப்பதற்கு நெறி முறைகள் உண்டு, எப்போதும் பாவனை இருக்கிறது, இதை உயர்ந்த வகையில் பயனபடுத்தது என அறிவுறுத்துவது சமயம்; அறிவினால் உண்டாகிற இன்பத்துக்கு மேலும் வாழ்க்கையில் ஓர் இன்பம் காணப்படுகிறது. இது அன்பினால் வருவது. அறிவு இன்பத்தை விட அன்பு இன்பம் பெரியது; அன்பு இல்லார் அறிவு பெரிதாயிருந்தாலும் மதிப்பதற்கில்லை; அறிவு இல்லாமல் அன்பு இருந்தாலும் மதிப்பதற்கில்லை. இரண்டும்வாழ்க்கைக்குக் கட்டாயமானவை.

அறிவு இன்பம் வெளி உலக இன்பம்; அன்பு இன்பம், உள் இன்பம்; திருவள்ளுவர் பொருட்பாலில் அறிவையும், அறத்துப் பாலில் அன்பையும் கூறியிருக்கிறார். திருவள்ளுவர் நூலை மூன்று பாகங்களாகப் பார்க்கலாம். முதலில் இருப்பது அறத்துப்பால்; இரண்டாவது பொருட்பால்; மூன்றாவது காமத்துப்பால். பொருட்பாலை நடுவாக வைத்திருப்பதால் பொருளைக் கொண்டு இருநலன்களையும் பெற வேண்டும் என்றும், அறத்துப்பால் முதலில் கூறப்பட்டிருப்பதால் அற முறைகளால் பொருளைத் தேடவேண்டும் என்றும் தெரிகிறது. அறிவைப் பொருட்பாலிலும், அன்பை அறத்துப்பாலிலும் கூறியிருக்கிறார் ஆசிரியர். பொருள் அறிவு பெறுதலாகிய வெறும் அறிவு நிலை, பொருள் அறிவைக் கொடுக்கிறது; உயர்ந்த அன்பை அறத்துப்பாலிலும், இடைப்பட்ட அன்பைக் காமத்துப்பாலிலும் கூறியிருக்கிறார். அன்பும் மெய்யுணர்வும் சிறப்பதற்காகத்தான் பொருளைத் தேடி வாழ்க்கை நடத்தவேண்டும்; அன்பு நிலையில் உயர்கிறபோது உணர்வு சிறப்பு நிலையை அடைகிறது.

அறிவு என்பது வெளி உலக ஆராய்ச்சி; ஒருவர் உள்ளத்தை இன்னொருவர் அறிந்து செலுத்துவது அன்பு; கற்கண்டுபோல கரடுமுரடாக இருப்பது அறிவு; நன்றாகப் பதப்பட்டுக் கனிந்து இருப்பது அன்பு. பண்ட ஆராய்ச்சி சிறியது; உயிரின் உணர்வு ஆராய்ச்சி பெரியது. இதன் கனிவு காமத்துப்பாலிலும், பலன் அறத்துப்பாலிலும் இருக்கின்றன. அறிவு நிலையிலும் அன்பு நிலையிலும் இருப்பதை விட உணர்வால் உணர்வது முற்றி உலகுக்குப் பயன்பட வாழ்தலே வாழ்க்கையின் முடிந்த நிலை. உலகுக்குப் பயன்படுவது மேடைமீது ஏறியது மாதிரி இருக்கிறது. இதுவே திருவள்ளுவர் கூறிய முறை. இவ்வுண்மை பொருளாதார நிலையில் உள்ளவர்க்கும், அரசியலார்க்கும், உழைப்பவர்க்கும், எல்லோர்க்கும் பொருந்தும். ஆகவே நாம் அன்பால் உணர்வு நிலைக்கு உயர்ந்து உலகுக்குப் பயன்படுகிற முறையில் வாழவேண்டும்.

அறிவு ஒன்றைப் பிரித்து ஆராயும், அன்பு சேர்த்து உணரும்; இது உணர்வதில் உள்ள வேறுபாடு. கீரையை, அரிசியை எப்படி ஆராய்கிறோம். பள்ளிக் கூடத்தில் ஆராய்ச்சி எப்படி நடக்கிறது? மனிதனைப் பற்றி ஆராய்ந்தால் எத்தனை

எலும்புகள், இரத்தம் எப்படி ஓடுகிறது, கண் எப்படி பார்க்கிறது என ஒவ்வொன்றையும் பிரித்துப் பிரித்து ஆராய்கிறோம்; பிரித்துப் பார்த்துதான் ஆராய முடிகிறதாதலின அறிவு பிரிவினையில் சேர்கிறது; இத் தெளிவு நமக்கு இருந்தால்தான் பிரிந்து நிற்பதா எனத் தோன்றும்.

பிரித்துப் பார்த்தால் உதிர்ந்து விடுகிறது, சேர்த்துப் பார்த்தால் உருவம் அடைகிறது. வேலைக்குப் பயன்பட வேண்டுமானால ஆராய்ச்சியிலேயே நில்லாது சேர்த்துப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இப் பாகுபாடு செய்த பிறகு ஒருவரை அன்பால் உணர்கிறோம் என்பது அவரைப் பார்க்கிறோம் என்பதாகும். ஒருவரை நினைக்கிறோம் என்றால் வடிவத்தை நினைக்காமல் நினைக்க முடியுமா? நினைக்கும்போதே உருவம் முன் வந்து நிற்கிறது. போட்டோ பிடித்தால் படம் விழுவதுபோல நம் உள்ளத்தில் அவர் உருவம் இருக்கிறது. அவரை அப்படியே உள்ளத்தில் வாங்குகிறோம். இப்படி வாங்குதலே பாவித்தல். பாவித்தல் அன்பு நிலை என்றும், ஆராய்தல் அறிவு நிலை என்றும் முன்னோர் கூறுவர்.

(வரும்)

Telegrams: "RAMBROS"

**N. Ramu Bros;**

GENERAL HARDWARE

MERCHANTS

AVANASHI ROAD,

COIMBATORE.

# கலைத் துறை

## நாடகம் — நடுவு நிலை

(முன் தொடர்ச்சி)

அவன் அன்பெல்லாம் பசியின் முன்பு பஞ்சாகப் பறந்தது; முகத்திலே கோபம் தாண்டவமாடியது.

'ஈரக்கட்டையுடன் மாரடித்துக் கொண்டது எனக்கல்லவா தெரியும். உனக்கென்ன ஒய்யார புருஷன்........'

அனாவசியமாகப் பேசினாள். இருந்தாலும் பயம் ஒரு புறம் அவளைப் பற்றிக்கொண்டது. எங்கே உடம்புக்குக் 'கட்டு' கட்டவேண்டிய நிலை வந்து விடுமோ என்று கலங்கினாள். 'பெண் தோல்வியை ஒப்புக் கொள்ளமாட்டாள்' என்பதற்கு எடுத்துக் காட்டாகத்தான் விருப்புடன் பேசினாள்.

வயிற்றைக் கிள்ளும் பசி இவனுக்கு விறுவிறுப்பைக் கொடுத்தது.

'எதிர்த்தா பேசறே கழுதை' என்று கையையும் ஓங்கி விட்டான் அடிப்பதற்கு உடனே; அவள் கீழே விழுந்தாள். புரண்டாள். கத்தினாள்.

'என்னையடா அடிக்க வர்ரே? நான்தாண்டா குலதெய்வம். என்னையடா அடிக்க வந்தே? உன்னை என்ன செய்கிறேன் பாரடா? அப்பனே!'

ஆர்ப்பரித்தாள்; நடித்தாள்; அவன் துடித்தான்.

'ஐயோ! மாரி மகமாயி, காளியம்மா, திரிசூலி, நீலி என் பக்கத் துணையிருந்து பாதுகாரம்மா. ஏழையை வாழ வையம்மா. குற்றத்தை மன்னித்து விடு தாயே.'

கெஞ்சினான். கண்ணீர் விட்டான். கத்தினான். கூத்தாடினான் கருணை காட்டு தாயே என்று வணங்கினான். ஆம்! வணங்கினான்! — மனைவியைத்தான் — இப்பொழுது மனைவியா, — மாரித் தாயாயிற்றே.

அடேய்! அந்த இலையை எடுத்துப் போடடா. அந்த உணவை இதில் வையடா.

இலையில் வைத்த இன்சுவையுணவைத் தன் கையால் எடுத்து அள்ளி அள்ளித் தின்றாள்.

இதைக் களிப்போடு பார்த்திருந்தான் கணவன், இல்லை அப்பாவி மனிதன்.

இலையில் இருந்த உணவு ஆகிவிட்டது.

இவள்மேல் இருந்த சாமியும் மலையேறிப் போய் விட்டது.

கண்ணைப் பரக்கப் பரக்க விழித்தாள் காதகி.

'அடியே! உன்மேல் நம் குலதெய்வம் குடிகொண்டா.'

ஐயோ பாவம். அவள் வேடத்தை அறியாத அவன் ஆச்சரியத்தோடு சொன்னான்.

இவள் அதிசயப்படுவதுபோல் நடித்தாள்.

'ஆ........அப்படியா. கொண்டுவந்திருந்த உணவையெல்லாம் சாப்பிட்டுவிட்டாயா?'

வஞ்சகி, பசப்பு வார்த்தைகளினல் பசப்பினாள். அவன் அதை நம்பினான்.

'குலதெய்வம் விரும்பிக் கேட்டது. கொடுத்துவிட்டேன்' அவன் ஆயாசத்தோடு பதில் சொன்னான்.

'அட பாவி மச்சான். அதைச் சாப்பிடக் கூட உனக்குக் கொடுத்துவைக்கவில்லையா? அதை உணவாக ஆக்கியவுடன் சிறிது வாயில் எடுத்துப் போட்டுப் பார்த்தேன், எவ்வளவு நன்றாக இருந்தது தெரியுமா? ஹூம்.... அவ்வளவுதான் நீ கொடுத்துவைத்தது. வா, வீட்டுக்குப்போகலாம் கூழையாவது குடி'

இதுதான் கதை.

ஏதாவது ஓர் உயர்ந்த கருத்தை வெளிப்படுத்துவதைத்தான் நான் நாடகம் என்று கருதுவது வழக்கம்.

இந்த நாடகம் எனக்கு மிகவும் பிடித்திருந்தது. இதைப் போன்ற மாரியாத்தா மனைவிகள் தங்கள் அப்பாவிக் கணவன்மார்களை ஆட்டிவைக்கும் முறை என்று அழியுமோ—என்று ஏங்கினேன்.

சிறு நாடகந்தான், ஆனல் சிந்தனையைத் தூண்டிவிட்டது.

கடவுளைக் காரணங் காட்டிச் சில தந்திரக்காரர்கள், கயமைத்தனம் செய்து வருகின்ற காரணத்தால்தான் 'கடவுளுக்குரிய குணம்' மறக்கப்பட்டு வருகிறது. இல்லை, மறக்கடிக்கப்பட்டு வருகிறது என்பதற்கான சிறந்த எடுத்துக்காட்டு இந்த நாடகம்.

ஏமாற்றினாள். ஏமாந்தான். வலை விரித்தாள். விழுந்துவிட்டான்.

பசித்திருந்த 'காளைச்'சிங்கத்தை, 'பாவை' நரி ஏமாற்றிவிட்டது. அதனுடைய இரையையும் தின்றுவிட்டது.

அவனும் அவ்வளவு கோபம் கொண்டிருக்கக் கூடாது. அவளும் அவ்வாறு நடித்திருக்கக் கூடாது. அதைவிட 'மோசக் குற்றம்' பசித்திருந்தவன் பார்த்திருக்க, கொண்டுவந்திருந்த உணவைப் புசித்தது.

'மச்சான்' மன்னித்துக் கொள். வரும் நேரத்தில் வயிற்று வலி வந்துவிட்டது. வர நேரமாகிவிட்டது. உட்காருங்கள். இதோ இலை. இதோ தண்ணீர்.'

என்றவாறு இன்சொல் கூறி அவன் கோபத்தை மாற்றியிருக்கலாம்.

அவன் உட்கார்ந்து கொண்டு கோபங்களையெல்லாம் மூட்டை கட்டிவைத்துவிட்டு 'இப்பொழுது எப்படி இருக்கிறது' என்று அன்புமொழி பேசுவான்.

அதைப்போலா நடந்தது?

அவள் ஆர்ப்பரித்தாள். இவன் அடங்கினான்.

அவள் நடித்தாள். இவன் நடுங்கினான்.

'காதல் மொழி பேசிக் களிப்பு வாழ்க்கை' நடத்தியவர்கள் நம் தமிழர்கள் என்று புத்தகங்களில் கூறப்பட்டு வருகிறது.

வேதனைமொழி பேசி வெறுக்கும் வாழ்க்கையை நடத்துபவர்களாக மாறி வருகிறார்கள் இன்றைய தமிழர்கள்.

கணவன் மேல் 'வீண் பழி' கூறுவதையே தன் தொழிலாகக் கொள்கிறாள் மனைவி.

மனைவியின் பணிவிடைகளிலே மாசு கற்பிப்பதையே தன் இயல்பாகக் கொள்கிறான் கணவன்.

வண்டியிலே பூட்டப்பட்ட இரண்டு மாடுகளும் வெவ்வேறு கோணங்களிலே செல்ல முயல்கின்றன.


நஞ்சன்கூடு பல்பொடி

பாக்டெரியாரின்




யுனைடெட் கன்ஸர்ன்,

54; பந்தர்த் தெரு,:: சென்னை 1

வண்டி நோக்கச் செல்லவில்லை. இல்வாழ்வு மட்டும் ஒழுங்காகச் சென்று கொண்டிருக்குமா?

இந்த நிலை ஏன் ஏற்படுகின்றது? மனைவி கணவனுக்கு அடங்கியவள், அவளுடைய கருத்தை நாம் ஏன் கேட்பது, அவள் யார் நமக்கு அறிவுரை சொல்வதற்கு? 'பணிவிடை' செய்கிறாள் என்றால் அதற்குத் தான் நான் அவளுக்கு உணவு அளிக்கிறேன், உடுக்க உடை கொடுக்கிறேன். இருக்க இடமளிக்கிறேன். அணிகலன்கள் அணிந்து கொள்ளச் செய்கிறேன் அவள் என் 'விலை கொடுத்து வாங்காத, அடிமை. என்றவாறெல்லாம் நினைக்கிறான் கணவன்.

என்னைக் கேட்டா அவர் அந்தக் காரியத்தைச் செய்தார்? நான் மட்டும் அவரைக் கேட்க வேண்டுமா? அன்பு மொழி பேசுகின்றாரோ உணவு முதலியவை அளிக்கின்றாரே என்றால், அதற்குத்தான் நான் இந்த வீட்டில் மாடாய் உழைத்து ஓடாய்ப் போகின்றேனே! அவர் யார் என்னை அதிகாரம் செய்வதற்கு? என்றெல்லாம் நினைக்கிறாள் மனைவி.

'ஒற்றுமை, கூட்டுறவு' இவ்விரண்டையும் உலகம் விரும்புகின்றது.

ஆண்டான் அடிமை மனப்பான்மை கொண்ட கணவனும், ஆர்ப்பரிக்கும் மனைவியும் குணத்திலே ஒற்றுமையாகத்தானே காணப்படுகின்றார்கள். இவர்கள் நல்வாழ்வு வாழாததற்குக் காரணம்?

பொல்லாதவர்கள் கூட்டுறவை, நல்லவர்கள் விரும்ப மாட்டார்கள்.

இல்லாதார் (பணம்) கூட்டுறவை, இருப்பவர்கள் விரும்ப மாட்டார்கள்.

# திருக்குறட் செயற் குறிப்புகள்

இல்வாழ்க்கை:

1. இல்லறக் கடமைகளுக்கு ஒரு மாதிரி இல்லம் அமைத்தல்.

2. 'வாழ்க்கை என்பது இல்லற ஒழுக்கமே' என்னும் உண்மையை, வரலாறுகள், வரலாற்றுச் சித்திரங்கள், வரலாற்றுச் சிற்பங்கள் முதலியவற்றாலும் விளக்கி நிறுவி வருதல்.

3. ஒரு திருமண மண்டபம் அமைத்து, நன் முறையில் இந்நாட்டுப் பண்புகள் சிறக்கும் வகையில், எளிய ஆனால் திறமான செலவில் அளவில், எரியோம்பி இறைவழிபாடு செய்து இல்லறக் கடமைகளை அறிவுறுத்தித் திருமணங்கள் செய்வித்தல்.

4. நாட்டில் ருடும்பம் குடும்பமாக இருந்து ஒவ்வொரு குடும்பமும், குழந்தை குட்டிகளுடன் ஒவ்வொரு நற்பணியை ஏற்றுத் திறமாகவும் இல்லறக் கடமையாகவும் செய்து வருமாறு இயக்குதல்.

5. ஒரு, மாதிரி இல்வாழ்வாரை இருத்துதல்.

6. பல நாட்டு இல்வாழ்வார் நிலைகளும் நோக்கங்களில் வேறுபடுதலை எழுத்து, கண்காட்சி முதலியவற்றால் புலப்படுத்தி, உயர்ந்தது இது எனத் துணியச் செய்தல்.

7. திருவள்ளுவர் அவர் துணைவியாருடன் இருந்து ஆற்றிய இல்வாழ்க்கை நிலைகளைச் சித்திரங்களால் அமைத்தல். அவ்வரலாற்றுண்மைகளை ஆய்ந்து உண்மை தேர்தலும் சான்றுகள் சேமித்தலும் செய்தல்.

8. நன்முறையில் திருமணங்கள் செய்விக்கும் ஆசிரியர்களைக் குருகுலத்தில் பயிற்றி, நாடு முழுதும் அனுப்பி, வாழ்க்கை நோக்கம் நிலைப்பிக்கும் தொண்டராகப் பணி செய்யுமாறு அலுவல் முறையில் அமைத்தல்.

9. திருமணக் குருமார்க்குக் கோட்டங்கள்தோறும் இளைகள் அமைப்பித்து நாட்டின் நலனுக்கு ஓர் இயக்கமாக அதனை நடப்பித்தல்.

10. தன்னல இழப்புக்கும் அறச் செய்கைக்கும் ஒரு பயிற்சி நிலையமாகவும் தொண்டு நிலையமாகவும் ஒவ்வொரு குடும்பமும் அமையும் வகையில் பெருவாரியாகத் தொண்டுகள் செய்வித்தல்.

---

கல்லாத மூடர்கள் கூட்டுறவைக் கற்றறிந்த அறிஞர்கள் விரும்ப மாட்டார்கள்.

இங்கும் கூட்டுறவு முறை பழிக்கப்படுகின்றதே! ஏன்?

—அ. தி. வீரராகவன்.

PHONE 55034 TEL. ENKAYAM
கைத்தறி ஆடைகளில் சிறந்தது எங்கள் கிசான் டிரேட்மார்க்


பட்டாடைகளுக்கும் நூலாடைகளுக்கும் சிறந்த இடம்
கறுப்பண முதலியார் ஸ்டோர்ஸ்
53, கிடங்கு தெரு சென்னை 1.

# எப்படி தியானம்?

கந்தரநுபூதி விரிவுரையின் போது ஆசிரியர் அருளிய விளக்கத்தினின்றெடுத்த ஒரு சிறு குறிப்பு:

ஆண்டவன் குணக் குன்று. குணம் அவன் பண்பு. "பாசம் பலவுங் கடந்து பரிந்தருள் சேர் பண்பாற் குலவி விளங்கு குணக் குன்றோன்" அவன் எண்குணபஞ்சரன். அதாவது எண்ணத் தக்க மதிக்கத் தக்க குணங்களுக்கு இருப்பிடமானவன். சத்து சித்து ஆனந்தன்.

குணத்திற்கு மேல் செல்வமில்லை. உயர்வாய் நன்றாய் மதிக்கத் தக்க படி அதற்கு மேம்பட்ட தென்றொன்றில்லாத பண்பு குணம்தான். குணம் இல்லாது எதும் மணம் கொள்ளாது. கல்வி கேள்வி அறிவு செல்வம் முதலியன வாய்க்கப் பெற்றும் குணமில்லாது போனால் பயனில்லை; குப்பையில் எறியத் தக்க நிலைதான். குணத்தான் சிரேஷ்டமானது; உலகத்தில் நாம் பெற வேண்டிய பாக்கியம் அதுதான். அறிவு, அன்பு, அருள், தெய்வத் தன்மை, இரக்கம், சான்றாண்மை முதலியன இயல்பாகவே வருவது குணம். சாத்விக, ராஜஸ, தாமஸங்களான முக்குணங்கள் மேற்கூறிய குணப்பண்பினின்றும் வேறுபட்டவை. முக்குணங்கள் நாம் உட்கொள்ளும் பால் காய் கனி கிழங்கு முதலிய உணவு வகைகள் பிற பேதங்களால் ஏற்படுபவை.

பூரணமாய் எண்ணப் போனால் ஒருவரை அவர் குணத்தால்தான் மதிக்கிறோம். குணமுள்ளவரிடம் தான் உள்ளம் வேகமாய்ப் பாயும். ஓர் அன்புடையார் குணத்தைப் புகழை எண்ணும் போது உள்ளம், உடம்பு, உறுப்புகள், அவரிடம் பூரணமாய்க் கட்டுப்படுகின்றன. இப்படிப் பட்ட அகநலப் பண்புகளையே எண்ணுகிற அழகுகளை, நானூறு வகைகளில் அகப்பொருள் இலக்கணமாகத் திருக்கோவையாரில் மணிவாசகப் பெருந்தகையார் அருளியிருக்கின்றார். சாதாரணமானவர்களிடையே அன்பு காரணமாகக் கருத்தொருமித்திருத்தலைக் காண்கிறோம். ஒருவர் பட்டினிகிடக்க மற்றவரும் பட்டினி இருத்தல், காதலி இறக்கக் காதலனும் மடிதல் முதலிய நிகழ்ச்சிகளை அறிகிறோம். உள்ளம் அப்படி இருவரிடையும் பரிபூரணமாய் ஒன்றியிருக்கிறது.

புத்திக்கு மேற்பட்ட ஒரு அன்பு நேசம் பரவி விட்ட பிறகு புத்தி வேலை செய்யாது. தலைக்கு மேல் நீர் மட்டம் போனது போல் அவ்வளவு தூரம் நேசம் கொள்ளப் புத்தி மழுங்கி விடுகிறது.

சாதாரணமானவரிடமே இப்படியிருக்க, இந்தக் கொழுந்தோடிய அன்பை உள்ள நெகிழ்ச்சியை ஆண்டவன்பால் செலுத்தி ஒருமித்துச் சிந்தித்தலே தியானம். அவன் உயிர்களிடத்துக் காட்டும் இரக்கமும், பேரன்பும், அருளும், அவன் நம்மைக் காணுந்தோறும் காப்பாற்றும் அழகு நிலைகளும், அவனுடைய லீலா விநோதங்களும் எண்ணியும் பார்க்கொணாத எவ்வளவோ உயர்ந்த எல்லையிலுள்ள அப்பெருமான் உயிர்கள் மீது இரக்கம் காரணமாக இம் மண்ணிலும் தன் திருவடிபட எழுந்தருளி ஆட்கொள்ளும் எல்லாமும், எளிமையில் இனிமையும் அழகுமாயிருக்கும் தன்மைகளும, கணக்கிலடங்கா அண்டாணடங்களையும அவற்றிலுள்ள பல்வேறு உயிர்த்திரள்களையும் படைத்துக் காத்து அழித்து அருளி, தன் ஒப்புவமையற்ற சக்கர நெறி நிறுத்தியாளும் போற்றலும், நினைக்க நினைக்க, சிந்திக்க சிந்திக்க, உள்ளம் ஆராமையால் உருகி நெகிழ்ந்து கரையும். காரணமேயின்றி இயல்பாகவே உள்ளம் அவன்பால் ஓடும். பிரிவு பிரிவாக எண் வகையான இறைவன் குணங்களை நன்றியறிதலுடன் பாராட்ட உள்ளம் கசிந்துருகி உணர்வு முதிர முதிர, கடைசியில் தெய்வம் என்றால் ஆராமையாயிருக்கிற தென்னும் நிலைக்கு வருவோம். மனம் வேறெங்கும் இருப்பிடம் கொள்ளாது; ஏக்கங் கொண்டு வேட்கையோடு இயல்பாகவே ஆண்டவன் திருத்தாட்களில் பதிந்து அழுந்திக் கிடக்கும்.

அப்படி சகஜ தியானமாகவே போய்விடும். திருவருளுடன் ஐக்கியப்பட்ட நிலையிலிருப்பர். இப்படி அவன் பக்தி மேலிட்டு உணர்வில் தாகமும், வேகமும், உள்ள நெகிழ்ச்சியும் கொண்டு நிற்றல் தியானம்.

தியானிக்கத் தக்க குண நலங்களுக்கிருப்பிடமான ஆண்டவனிடமிருந்துதான் மனிதர்களுக்குக் குணம் வருவதால், உண்மையாயொழுகி உள்ளத்தைப் பளிங்குபோல் வைத்துக் கொண்டு அக் குணக்குன்றைச் சார அவர்களும் குணமலையாகி முடிவிலா இன்பம் எய்துவர்.

—மோகனரங்கன்.

பதிப்பித்து அச்சிட்டு வெளியிடுவோர்; இ. ச. பாலசுந்தரம், [illegible], மாம்பாக்கம்; மதுராந்தகம். (அஞ்).